**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.86/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேஷ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : குப்பணகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : மஞ்சநாயக்கன்பட்டி | வயது | : சுமார் 65 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 10.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தின் மொத்த கிரைய தொகை எவ்வளவு என்றால் ? தொகை ரூ.6,50,000 ஆகும். கிரைய முன் தொகை கொடுத்தது எவ்வளவு என்றால் ? ரூ.6 இலட்சம் ஆகும். பாக்கி கிரைய தொகை ரூ.50 ஆயிரம் தொகைக்கு எவ்வளவு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது என்றால் ? 3 ஆண்டுகள் ஆகும். 3 ஆண்டுகள் காலக்கெடு நிர்ணயம் செய்துள்ள நிலையில் அதற்கு என்ன காரணம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் 10.10.2022ம் தேதி வரை நான் சொத்தினை கிரையம் செய்வதற்கு நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ? நான் பிரதிவாதியிடம் சொத்தினை எழுதிக் கேட்டேன். அவர் எழுதி தருவதாக சொன்னார். கிரைய உடன்படிக்கை முடிவதற்கு 3 நாட்களுக்கு முன்பு தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ? ஆமாம். நான் சொத்தினை கிரையம் பெற தயாராகவும், விருப்பமாகவும் இருந்திருக்கும்பட்சத்தில் 3 ஆண்டு காலக்கெடுவிற்குள் சொத்தினை கிரையம் பெற நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், சொத்தினை கிரையம் பெறும் நோக்கில் இல்லாத காரணத்தினால் தான் நான் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் ? சரியல்ல. இவ்வழக்கு

பிரதிவாதி சொத்தினை விற்பனை செய்யும் நோக்கில் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தவில்லை என்றாலும், கடனாக தொகை பெற்ற காரணத்திற்காகவே இவ்வழக்கில் ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் ? சரியல்ல. இவ்வழக்கினை பொறுத்து கடன் கொடுத்த வகையில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதால் நான் கோரியுள்ள ஆற்றதை ஆற்றுக பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும், பணத்தை திரும்ப கோரும் பரிகாரமே எனக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் ? சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.10 17:12:03 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்